429

429

# தன்மான இயக்கம்

(சுயமரியாதை)

# சாற்றியது என்ன?

R34·N47
68714

விலை 0 2 0

# தன்மான இயக்கம்

## (சுயமரியாதை)

# சாற்றியது என்ன?

★

ஆசிரியர் :

திருவத்திபுரம்

மாவண்ணு. தேவராசன்

★

ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம்

கடை வீதி, : : திருவத்திபுரம்.

இரண்டாம் பதிப்பு
பதிப்புரிமையுடையது

★

Printed at Sri Lakshmi Press, Tiruvetipuram
Q.H. N.A. 45 for Sri Lakshmi Nool Pathippagam
Tiruvetipuram Q.H. N.A. 69 9-8-47 500

## வெளியிடுவோர் விளம்புவது :

எவ்வளவுதான் மறைத்தாலும், மறுத்தாலும், மறந்தாலும்கூட, சுயமரியாதை இயக்கம் இனி அழிந்து போகாத— அழிக்கப்படவும் முடியாத ஒரு நல்ல நிலையான இடத்தைத் திராவிடமக்களின் - சிறப்பாகத் தமிழர்களின் உள்ளங்களில் ஏன்? — திராவிடர்களின் எதிரிகளின் உள்ளங்களிலேயே தனக்கெனப் பெற்றுக் கொண்டுள்ளது. இவ்வுண்மை நம் எதிர்க்கட்சித் தோழர்கள் இன்று நம்மைக் கண்டித்து ஏளனம் செய்வதிலிருந்தும் நாம் எடுத்துக்காட்டிய சமூக ஊழல்களில் பலவற்றை நீக்கும் நற்பணியில் அவர்கள் ஓரளவாவது துணிந்து முன் வந்திருப்பதிலிருந்தும் விளங்கும்.

சுயமரியாதை இயக்கத்துக்கு எதிர்பாராத இடத்திலிருந்தெல்லாம் எதிர்ப்பு ஏற்பட்ட காலம் ஒன்றிருந்தது. இன்றோ, எதிர்பாராத இடத்திலிருந்தெல்லாம் பேராதரவு பெருகி வருகிறது. படித்தவர்-படிக்காதவர்கள், எதிர்கட்சித் தோழர்கள் நம் கொள்கைகளை எடுத்துப் பாராட்டிப் பேசுவது ஒருபுறமிருக்க, மாணவர் - இளைஞர் உலகம் நம் இயக்கத்தை நாடி வந்து கொண்டே இருப்பது, எதிர்காலத்தில் சுயமரியாதை இயக்கமே ஆட்சி செய்யப் போகிறது என்ற உண்மையை வலியுறுத்துகிறது.

இத்தகைய பெருமைக்குரிய நம் இயக்கத்தையும், அதன் தலைவர் பெரியாரவர்களையும் கண்ணும் கருத்தும் இருந்தும், இழந்த சில எதிரிகள், "சு. ம. காரர்களுக்கு கொள்கையில்லை; ஈ. வெ. ரா. நாஸ்திகம் பேசி நாட்டைக் கெடுக்கிறார்; சு ம. காரர்கள் எல்லாத் துறைகளிலும் நுழைந்து கேவலமான துவ்ஷ்பிரச்சாரம் செய்கிறார்கள்" என்றெல்லாம் இழிவாகப் பேசி வருவதே தேசத்திருத்தொண்டாக நினைத்துள்ளார்கள். அவர்கள் விழிப்படைய—அறிவுபெற இந்நூல் ஒரு காலக்கண்ணாடியாக விளங்குகிறது. இந்நூலில் உள்ள

உயர்ந்த எண்ணங்களை—சு. ம. இயக்கத் திட்டங்களை—மறுப்பவர்கள் ஒன்று மூளைக்கோளாறுக்கு ஆளானவர்களாக இருக்கவேண்டும்; இன்றேல் சுயநலப்பிண்டங்களாகத் தான் இருக்கவேண்டும் என்ற நம் தீர்மானத்தை, இந்நூலைப் படித்து இயக்கக் கொள்கைகளைப் புரிந்து கொண்டவர்களும் தயங்காமல் ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை உடையோம்.

எனவே, நாட்டில் தன்மான இயக்கம் மேலும் மேலும் பெருகி அறுகுபோல் வேரூன்றி ஆல்போல் கிளைத்து அரசு போல் தழைத்து எல்லாத் துறையிலும் பரவி எல்லோருக்கும் நன்மை செய்ய இந்நூலை இரண்டாம் முறையாகப் பதிப்பித்து வெளியிடுகிறோம.

நெடுநாளைய குறையை நிவர்த்தி செய்த ஆசிரியர்க்கு நம் நன்றி. தமிழகம்—ஏன், பகுத்தறிவு உலகம்—இதனை ஏற்றுப் பயன் பெறுக.

மா. நா. இராசமாணிக்கம்

---

சில சொல் :

"வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி" காணச் சு. ம. இயக்கம் பல்லாண்டுகளாய் முயன்றுழைத்து வருகிறது. இவ்வேலையை மேற்கொண்டுள்ள தலைவர் முதல் தொண்டர்வரை யாவரும் அவ்வப்போது கொட்டிய சு.ம. இயக்கக் கருத்துக்கள் பல; அம் முத்துக்குவியலை அகவற் பாமாலை ஆகக் கோத்துத் தந்துளோம்.

திக்கெட்டும் தீபரவ வெற்றிப் பாதையில் உழைக்கும் மாணவ மணிகளுக்கு இந்நூலை உரிமை செய்கிறோம்.

பதிப்பித்த தோழர்க்கு எம் நன்றி; வாழிய தன்மதிப்பு இயக்கம்.

ஆசிரியர்

# தன்மான (சு.ம.) இயக்கக் கொள்கைகள்

1 வருங்கால இந்திய அரசியல் வாழ்வினர்
வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம்
எப்படியாயினும் ஒப்புதல் வேண்டும்

2 பிறப்பினால் மக்கள் பேதமில் லாதவர்
சிறப்(பு) அவர் செய்தொழில் அறிவினால் சேரும்
எனவே பிறப்பால் உயர்வுதாழ்வினைக் கொள்ளும்
வேத ஸ்மிருதி சாஸ்திர புராண
இதிகாசம் முதலிய எல்லா வற்றொடும்
அவற்றால் எழும் மதம் கடவுள் முதலிய
தவறிய கொள்கையைத் தான் ஒழித்திடுவோம்!

3 ஒருகுலம் தனக்கொரு நீதியை உணர்த்தி நாற்
பிரிவுகள் செய்தும், பெரிதும் பார்ப்பனியமே
வளர்க்கும் கொடிய வருணாசிரமக்
கொள்கையை, ஜாதிப் பிரிவினை, எவரும்
ஏற்றுக் கொள்ளக் கூடாதென்போம்.

4 மனிதநாகரிகம், தேசமுன் னேற்றம்
தனக்குத் தடையாம் தீண்டாமைப் பேய்
தனை ஒழித் திடுவோம். சகலரும் ஓரேகுலம்.

5 பொது இடங்களை எலாம் புலையர் பஞ்சமர்களும்
தடங்கல் இல்லாமல் தான் அநுபவிக்கவும்
இப்பிறப் புரிமையை எதிர்ப்பவர் தமக்குத்
தண்டனை விதிக்கவும் சட்டம் செய்வோம்!

6 நெற்றியிற் குறிகள் ஒற்றுமை குலைப்பதால்
ஜாதிப் பட்டம் சண்டையை விளைப்பதால்
மக்களைப் பிரித்தறி யாவழி யாவரும்
தத்தம் ஜாதிப் பட்டமும் மதக்குறி
யாவும் விட்டினி ஒழுகுதல் வேண்டும்.

7 இளம்பெண் கிழவன் திருமணம் ஒழிப்போம்!
ஒருவர் பலரை மணப்பதும் ஒழிப்போம்
மணந்தவர் பிரிந்திட வேண்டின் அவ் வுரிமையை
அளிப்போம். பெண்கள் அறிவறிந்தபினர்
தாமே கணவரைத் தேர்த்திடச் செய்வோம்!
பெண் பதினாறும் ஆண் பதினெட்டும்
வயதடைந்தபின்பே மணம் புரிந்திடலாம்!
கணவனுக்குள்ள உரிமைகள் யாவும்
மனைவிக்குமுண்டு. மதமொடு சாதிப்
பிரிவுகள் இன்றிப் பேரன்பு கொண்டார்
கலப்பு மணமும் காதல் மணமும்
செய்வதில் எவரும் தடைசெயல் தீதாம்!
நாட்டின் வளர்ச்சியை நசுக்கும் முறையில்
ஈன—அறிவிலா-எண்ணிலா மக்களைப்
பெருத வாறு வழி வகுப்பதுடன்
பெண்களின் உடல்நலம் பேணிக் கருத்தடை
செயவும் விதிகள் செய்வோம்! நாட்டில்
பிறக்கும் பிள்ளைகள் அனைத்தையும் காக்கும்
பொறுப்பை அரசினர் எற்று நலம் புரிவர்!
தாலி யறுத்துத் தவிக்கும் விதவைகள்
மீளவும் மணம் செய்து வாழ விதி செய்வோம்!
திருமண நிகழ்ச்சியில் புரோகிதப் பார்ப்பனர்
ஆரிய முறைகள் அறிவுக் கியையா

மூட வழக்கங்கள் முழுதும் நீக்கி
ஒரே நாள் விருந்தில் சிக்கன ஒழுங்குடன்
பதிவு மணமாகச் செய்வோம்; தமிழ் மணம்
சட்ட பூர்வமாய்ச் செல்லவழி வகுப்போம்!
பெற்றவர் சொத்தில் பெண்கள் தமக்கும்
நற்றிரு மணம் செய்த பின்னும் ஆணுக்கு
உள்ளவாறுரிமை உண்டென விதிப்போம்!

8 பள்ளிக் கூடங்களில் படிக்கும் கலைஎல்லாம்
அறிவுப் புலமையின் வளர்ச்சிக் கல்லாமல்
இறையவன் சாதி மதப் பிரசாரம்
தனக்கல்ல என்போம்; தவறியவ் விதநூல்
மேல்மத சாதிக் கருத்தினை விளம்பினால்
அந்நூலை ஒழித்திடுவோம்! நம்தமிழ்
ஆட்சிக் கெதிராய் வரும் சூழ்ச்சி நூலையும்
பொசுக்கி விடுவோம்! புலையர் முதலான
இழிந்த நிலையில் இருக்கும் ஏழைகள்
தமக்கே மிக்க சலுகையும் தருவோம்!
எண்எழுத்தான இருதுறைக் கல்வியும்
எல்லா இளைஞரும் என்றும் கட்டாயமாய்ப்
பதினெட்டாண்டுகள் படிக்கச் செய்வோம்,
முதலில் தாய்மொழி தமிழையே வளர்ப்போம்!
அதன்பின் அரசியல் மொழியினை வளர்ப்போம்!
ஏனை மொழிகளைக் கற்க விரும்புவோர்
சொந்தப் பொருளால் கற்கலாம்; பொதுப்பணம்
கட்டாயக் கல்விதனை வளர்ப்பதற்கே
உயர்தரக் கல்வியைக் கற்குமாணவர்க்கு
மயர்வற வதப்புவரி விதிப்படி
ஆதரவளிப்போம்! அநீதிகள் ஒழிப்போம்!

தொடக்கப் படிப்பைச் சொல்லிக் கொடுக்கத்
தாய்மார்களையே தமிழாசிரியராய்ச்
செய்வோம்! தாய்மையின் வாய்மையே தூய்மையால்!

9 கடவுளை வழிபடக் காசு ஒன்றாயினும்
செலவிட மாட்டோம்; பலகடவுள் வழி-
பாட்டை ஒழிப்போம்! பரமன் ஒருவனே!
கடவுளை வணங்கும் காலையில் தரகரை,
மடமை வளர்க்கும் புரோகிதக் குழுவினை
இடையே நிற்க விடோம். நாம் நேரே
நம் தாய்மொழியில் அறிவுக் கொத்த ஓர்
அன்புக் கடவுளை அறிவாண்டவனையே
தொழுவோம்! வடமொழித் துதி ஒழித்திடுவோம்!
அறிவினைக் கெடுக்கும் புராணக் கதைகளை
உருவமும் நம்போல் மனைவி மக்களையும்
பொருளையும் விரும்பும் பொய்க்கடவுளையும்
கோயில் மடங்களில் வைப்பதைத் தடுப்போம்!
இருக்கும் கோயில்கள் எண்ணில ஆதலின்,
புதிய கோயில்கள் புதுக்கிடல் சட்ட
விரோதம் என்போம்! வீண்மடம், கோயில்
சத்திரங்களிலே செலவாம் பொருள்களை
இனி வாணிபம் கைத்தொழிலாராய்ச்சியில்
செலவிட விதியும் செய்வோம்! திருவிழாப்
பெயரால் பெரும் பொருள் அழிப்பது கொடுமை
தேர்த்திரு விழாக்கள் விடுத்தினி தேச-
முன்னேற்றம் செய் மொழி வளர்ச்சிக்கும்
தன்மானத்தை வளர்க்கும் வழியில்
சுகாதாரப் பொருளாதாரத்தில்
அறிவு வளர்ந்திட அழகிய அறிஞர்

சொற்பொழி வுடன்கண்காட்சியும் தொடங்குவோம்!
மடத்தின் சொத்தினை மக்களுக்காக்கி
மருத்துவம் அறிவியல் தொழிலியல் முதலிய
இயந்திர சாலையாய்க் கோயிலை இயக்குவோம்!
கோயில் தாசி, வேதியர், ஓதுவார்
ஆயசோம் பேறிகள் ஆட்சியை நீக்குவோம்!

68714

10 இந்து மதத்தால் இந்திய மக்கள்
நாயினும் கேடாய் நலிவதால், இனிநாம்
அறிவுக் கொவ்வா எந்த மதத்தையும்
ஏற்கா(து) இந்துஎன் றென்றும் நம்மையும்
அழைக்கா(து) உயர்ந்த அறிவுமதத்தையே
கைக்கொண் டதைத்திராவிட மதம் என்போம்!
மெய்யாய் நாமெலாம் திராவிடர் என்போம்!

11 எத்திசை வாழ்விலும் பார்ப்பன எத்தரே
மேல்பதவிகளில் விளங்கிஎவ் வுரிமையும்
பெற்றுயர் வதனால் மற்றவர்க் கெல்லாம்
நியாயமும் உரிமையும் நேர்மையாய்க் கிடைப்பது
முயற்கொம் பாயிருத்தலின் நாம் முயன்று
பார்ப்பனர்க்கவர் எண்ணிக்கைக்கு இயைந்த
விகிதமே பதவி உரிமைகள் ஈந்து மற்(று)
எவ் வகுப்பதனையும் செவ்வியின் உயர்த்துவோம்!
மோக்ஷ நரகம் முதலிய மொழிந்து
பாவபுண்ணியப் படிஉயர்(வு) இழிவாம்
எனப்பொய் புகன்று நமை எய்க்கும் ஆரியத்தை
ஒழித்து மறுபிறப்பு ஒன்றில்லை என்றுரைப்போம்!
காலக்குறைவினால் பொருளிடமேவல்
எல ஏழைக்கு இயையா விதம் விதி
வகுத்துயர் வாழ்வுறும் வழியினை ஒழிப்போம்!

R34

12 இசைநூற் புலவரும் இசை வாணர்களும்
நூலாசிரியரும், நாடகாசிரியரும்,
ஞாலம் உவப்ப நடிக்கும் தோழரும்
நாடக சினிமாக் கலைஞர் முதலாளியும்
பகுத்தறிவுக்குப் பொருந்தாக் கதைகளை
வகுத்தலும் நீதி நேர்மைக்கு எதிர்ப்பாய்
தன்மானமுடன் தன்னம்பிக்கையைக்
குறைக்கும் மதக் கருத்தினை வெறும் பொய்யினைப்
பரப்பும் கருத்துடை வரலாற்றினை இனி
முத்தமிழ்த் துறையில் புகுத்தி வாழாமல்
அறிவின் வளர்ச்சிக்கு ஆகவே எனும்பெரும்
குறிக்கோளுடன் உழைத்து ஒழுகுதல் வேண்டும்

13 உணவு விடுதியில் ஓடும் ரயிலில்
பிணஞ்சுடு காட்டில் பெருங் குளத்துறைகளில்
கோயில் சத்திர மடங்களில் பள்ளியில்
இன்னுமித் தகைய பொது விடங்களிலே
வகுப்பு வாதங் காட்டிடும் படித்தனித்
தனியிடம் வகுத்துச் சமுதாயத்தைப்
பிரித்துக் கெடுக்கும் பேதமை நீக்கியும்,
இத்தகை கொடுமை இயற்றுவோர்க் கெலாம் அர(சு)
உத்தரவு ஒழித்தும், ஒறுத்தும் அடக்குவோம்.

14 நாட்டின் முன்னேற்றம் பாட்டாளிகளின்
உண்மை உழைப்பினால் ஆம்:எனவே இனி
தொழிலாளிகட்குஇயைந்த உரிமைகள்
முழுவதும் அளித்தவர் வேலைக் கேற்ற
கூலியும் தந்தத் தொழிலின் லாபத்தில்
உரிய பங்குத்தொகையும் கொடுத்துதவுவோம்

15 தொழில்கள் அனைத்தையும் தனி முதலாளிகட்கு
அளித்திடாதவற்றை அரசாங்கப் பொறுப்பில்
நேரடியாக நடத்தவும் வேண்டும்.

16 "இத்தகைக் கொள்கைகள் எல்லாம் நலமே
வெற்றியடைய விரும்பினால். இவைக் கெதிர்
**ஆக உழைக்கும் அகில** இந்திய
**பார்ப்பனக் காங்கிரஸ்** மன்றத் திருந்து நம்
பார்ப்பனரல்லாத் திராவிடர் ஒன்றாய்
உழைத்தல் வேண்டும். உறுதியாய் உழைப்பின்
தீய ஆரியத் தொடு சேர்ந்து ஆங்கில நாட் (டு)
எகாதிபத்யமும் ஒழிந்து போகும்;
அதன்பின் விடுதலை எவர்க்கும் என்றும்
தானே உண்டாம். தமிழரே சேர்மின்,' என்(று)
அழைத்தனர் மக்களை அன்புடன், இம்மென
உயர் எண்ணங்களை உளப்புண் நின்றும்
பெருக் கெடுத் தோட விடுத்து நம் **பெரியார்!**
எற்றனர் மக்கள்; போற்றினர்; உலகம்
பயனுற யாவரும் பரிந்தொரு முகமாய்ச்
**சுயமரி யாதை இயக்கம் தோற்றி**
உழைக்கலாயினர் பழிகெட உவந்தே!

## நீதிக்கட்சி(Justice Party S.I.L.F.)ஏற்றுக்கொண்ட

## பெரியாரின் நிகரிலாத் திட்டங்கள்

---

1 உழுவோர் உலகத் தேர்க்கச் சாணியால்
உழுவோர் எல்லாம் உயர் உழைப் பாளராம்;
ஆதலின், அவர்கள் கடன்பட்டு அல்லல்
தீ(து)உறு வழி விதி திருத்திக் கடன் துயர்
நின்றும் விடுவித்(து) என்றும் செல்வர்கள்
கடனுக் காகஉழும் கடப்பாட்டினரைப்
பொருளை நிலத்தைக் கைப்பற்றுவழி
ஒருவிதி செய்வோம்; உயிரெனக் காப்போம்!

2 உடல் உழைப்பின்றிப் பொருள்கடன் கொடுத்துக்
கடுவட்டி வாங்கிக் கணக்கற்ற பொருள் சேர்த்(து)
உயிர்வாழ் லேவாதேவி உலுத்தரால்
வட்டிக்கார மார்வாரிகளால்
குடியானவர்கள் குலைந்தழிந்திடாவகை
கூட்டுறவை வளர் நாணயச் சங்கமும்
பாட்டாளிக் குதவும் நிலஅடமான
பாங்குகள் மிகவும் பலவழி பெருக்கிப்
பாங்குடன் அரசினர் பார்வையில் வளர்ப்போம்!

3 சொத்துரிமையினால் தொடர் வழக்குகளை
மெத்தவும் குறைக்கச் சொத்துரிமைகளைக்
குறிக்கும் நூல்களைத் தெளிவாய் நெறிமுறை
அரசாங்கத்தார் வைத்தினி(து) ஆள்வதும்
அன்றியும் காரணம் ஆகவும் போலி
என்றும் எழுதிய தென்று எதிர் வழக்கிடும்

பினாமி [Benami] முறையை அநீதி என்றழித்து
நீதி மன்றத்து அவ் வழக்கு செல்லாதெனச்
சட்டம் செய்வோம் ;

4 தளராது உழைக்கும்
குடியானவர் பயிர் விளைவால் கொழித்த
பலனைப் பெறுமல் பாழ்ப்பட இடையிருந் (து)
அப்பலன் கவர்ந்துண்(டு) ஆணவமாகக்
குடியானவரை வருத்தும் கொடியரைத்
தந்திரத் தரகரை சந்து செய் வணிகரை
நீக்கி, விளைபொருள் பயனை நிலையாய்ப்
பயிரிடு வோரேபெற நல்ல விலையில்
வாங்குவோர் தமக்குப் பாங்குடன் நேரில்
விற்றிட ஒருவழி விதிப்போம் ; மதிப்போம் !

5 பொதுமக்கள் நலம் மிகப் போற்றிப் புகுத்திய
'தந்தி தண்ணீர்ப் படைப் (பு) உடன் தபால், ரயில்'
விந்தை மின்சார விஞ்ஞான விளைவினை
எவ்வா (று) அரசாங்கத்தினரே தம்
செவ்விய மேற்பார்வையின்கீழ்ச் சிறப்பாய்
நடத்தி வருகின்றனரோ அவ் வாறே
எடுத்தமற் றெல்லாச் செயலையும் இனிமேல்
சர்க்கார் தாமே நடத்துதல் வேண்டும்.

6 அரசாங்க ஊழியர் தமக்கெலாம் அரசினர்
''இன்ஷ்யூரன்ஸ்'' விதி எப்படி நலமுறச்
செய்துளார், அப்படி எனைய மக்களும்
உய்வுற அஞ்சல் நிலயத்து (Post Office) உதவிபோல்
விதிவகுத்து அதனை மதித்திட வேண்டும் !

7 நாட்டு மக்களின் நல்வாழ்க்கையில் நலம்
கூட்டி உயர்த்திக் கூடிய வரையிலும்
மேநாட்டவர்போல் வேண்டிய வருவாய்,
பெறவழி யாக வருவாய் விதியினைத்
திருத்தி யுயர்த்திட வேண்டும் ;

8 தொடக்கப்
படிப்பினை எல்லாப் பாமர மக்களும்
அடிப்படையாக ஓர் ஐந்தாண்டுத்
திட்டம் வகுத்துக் கட்டாயமாகக்
கற்றிடச் சட்டம் இயற்றிட வேண்டும்

9 கள்ளுண்பவர் நஞ் (சு) உண்பவராதலின்
உள்ளதை-அறிவை-ஒழித்துப் பழியொடு
வறுமையைக் கொடுக்கும் பெருநோய் கள்குடிப்
பித்தினை அறிவுக்கு ஒத்தஓர் வழியில்
விரைவில், ‘கள்குடி சட்டவிரோதம்’ என்(று)
ஒருவிதி வகுப்போம் ; உலகம் உய்ய !

10 பிறவி காரணமாய்ப் பேசும் கொடிய
ஜாதிப் பிரிவைத் தகர்த்து மன்பதையில்
தீண்டாமை, பார்க்காமை, சேர்ந்து தொழாமை,
உண்ணாமை முதலிய கொடிய வழக்கம்
அடியோடு ஒழித்து இனி யாவரும் சமம் என
ஒழுகுமா(று) ஒருவிதி வகுப்போம் ! அதற்குஎதிர்ப்
பழி செயும் பதகரைக் காலின்கீழ் மிதிப்போம் !

11 எத்துறையாக இருப்பினும், எவ்வகை
உத்தியோகத்திலும், மண்டிலத் துள்ள
எவ்வகுப் பினர்க்கும் அவ்வகுப்பினர் தொகை

11

அரசியல் நோக்கம் முதலிய நோக்கி
உரிய பங்கினையே உரியவர் பெறும் வழி
வகுப்புவாரி விதி செய்திடுவோம்.
நிலவரி விதியினைத் திருத்தி, எல்லோர்க்கும்
நலமுறச் சமமாய் நாட்டவர் ஏற்கத்
தக்கதாய் வரிப்பளுத் தாங்கும் படிவிதித்(து)
அவசிய முள்ளதேல் விலக்கும் அளிப்போம்!
மிகப்பெரு நிலங்களை உடையவர் தமக்கெலாம்
மிகப்பெரு வரிவிதிப்பு உண்டாம்; சிறிய
நிலக்கிழ வர்களுக்கு உண்டாம் சிறுவரி!

12 நகர்நாட் டாண்மைப் பெருங் கழகங்களுக்(கு)
உகந்த நெறியில் உரிமைகள் மிகுதியாய்
அளித்து மக்கட்கு ஆவன இயற்றும்
அதிகாரம் தந்து அரசினர் பார்வையில்
விதிமுறை நடைபெற வழிசெயல் வேண்டும்!

என்றெலாம் தன்மான இயக்கக் கொள்கையை
ஒன்றிய வழியில் அரசியற்கிய்யைய
வகுத்தளித்தார் நம்பகுத்தறிவு ஊற்றுப்
பெரியார்; இவற்றைப் பெரும்புகழ் பெற்ற
காங்கிரஸ் மன்றம் ஏற்க மறுத்தது!
ஈங்குள திராவிடர்க்கு உழைக்கும் நீதிக்
கட்சியார் உவந்து அதைக்கைக் கொண்டனரால்
நீதிக் கட்சியை நெஞ்சு உவந்து அன்புடன்
மேதகு சுயமரியாதைக்காரர்கள்
யாவரும் ஆதரித்தே யுழைத்தனரோ!

## இந்நூலைப் பற்றிய

# சில மதிப்புரைகள்

"சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளையும், பெரியாரின் நிகரிலாத திட்டங்களையும் அகவில்பாவில் பாடி இருக்கிறார்"

—"பிரசண்ட விகடன்'

"நம் இயக்கத்தின் எல்லாக் கொள்கைகளையும், சுருக்கமாகவும், விளக்கமாகவும், எளிய இனிய தமிழ் நடையில் அழகிய அகவற்பாவினால் கூறி, நீதிக்கட்சிக்கு பெரியார் அளித்த நிகரிலாத் திட்டங்களை தீட்டியுள்ளார

—"குடி அரசு"

"The subject matter is so composed in simple verse that the common man and the ordinary woman might easily understand........ It is indispensable to any non-brahmin who has the good of his **"Dravidanad"** at his heart'.

—"Liberator"

தன்மான இயக்கக் கொள்கைகள் நன்கு விளக்கப்பட்டும், தன்மான இயக்கத்திற்கும் அரசியலுக்குமுள்ள தொடர்புகள் விளக்கப்பட்டும், சமுதாயம் அரசியல் ஆகியவற்றின் அமைப்பு முறை, திராவிடநாடு தனிநாடாகப் பிரிக்கப்பட்ட பின் எப்படியிருக்கும் என்பது குறித்தும் மிகவும் விளக்கமாக தெளிவு படுத்தப்பட்டு இருக்கிறது

—"திராவிடநாடு"

25-08-95

# கருஞ்சட்டைப்படை வழிநடைப்பாடல்



மா. அண்ணா. தேவராசன்

விலை 0 8 0

எங்களிடம் கிடைக்கும்

Printed at S.L.P. TVP. Q.H. N.A. 45 5-11-47 500